# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.119/மா/2022**

**நாள். 20.09.2022**

திரு. R. மயில்சாமி,
புதுவிளாங்குடி,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் - 02,
மதுரை மாநகராட்சி,
மதுரை. – எதிர்மனுதாரர்

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 30.07.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.08.2022–ல் பெறப்பட்டு 119/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்குஅனுப்பியுள்ள 30.07.2022 நாளிட்ட தனது மனுவில் :

" மதுரை மாநகராட்சி வார்டு 1, மண்டலம் 02 (வடக்கு) புதுவிளாங்குடியில் சுமார் பத்தாயிரம் மக்கள் வசிக்கிறார்கள். இதில் ஓட்டு வீடுகளிலும், குடிசை வீடுகளிலும் வறுமை கோட்டின்கீழ் சுமார் 1200 மக்கள் வசிக்கிறார்கள். இவர்கள் வீடுகளில் கழிப்பிடம் வசதிகள் இல்லாததால் சுமார் 1 கிலோமீட்டர் தூரம் நடந்து சென்று ஊருக்கு வெளியில் திறந்த வெளியில்தான் இயற்கை உபாதைகளுக்கு செல்ல வேண்டிய கட்டாயம் உள்ளது. ஆயினும் இரவு நேரங்களில்தான் பெண்கள் உபாதைகளுக்கு செல்லமுடியும். இதனால் பெண்கள் மன உளைச்சலுக்கு ஆளாகி

மிகவும் சிரமப்படுகிறார்கள். இதில் இரவு நேரங்களில் இயற்கை உபாதைகளுக்கு வெளியில் செல்லும்போது விஷஜந்துக்கள் தீண்டும் சூழ்நிலை உள்ளது. மேலும் மழைக்காலங்களில் பெரிய துன்பத்திறகு ஆளாகிவருகிறார்கள். ஆகவே பெண்கள் மற்றும் ஆண்களுக்கு பொதுகழிப்பிடம், குளியல் தொட்டி கட்டுவதற்கு 20.07.2022 தேதியில் பதிவு தபாலில் (RT516022170) மதுரை மாநகராட்சி உதவி ஆணையர் மண்டலம்–02 (வடக்கு) அவர்களுக்கு கோரிக்கை மனு அனுப்பி இருந்தேன். எனவே போர்கால அடிப்படையில் மிக, மிக அடிப்படை வசதியான பொதுகழிப்பிடம் மற்றும் குளியல் தொட்டி விரைவாக பொதுமக்களுக்கு கட்டித்தர உத்தரவிடுமாறு மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை வேண்டிக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரது புகார் மனு மீது அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற 06.08.2022 நாளிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டது.

3. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 06.09.2022 அன்று தூத்துக்குடி முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 01.09.2022 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

4. மனுதாரர் 06.09.2022 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

" மதுரை மாநகராட்சி, வார்டு–1, மண்டலம்–2(வடக்கு) புதுவிளாங்குடியில் ஓட்டு வீடுகளிலும் குடிசை வீடுகளிலும் வறுமை கோட்டின்கீழ் சுமார் 1200 பேர் வசிக்கின்றனர். இவர்களது வீடுகளில் கழிப்பிட வசதிகள் இல்லாததால் சுமார் 1 கிலோமீட்டர் தூரம்வரை நடந்து சென்று ஊருக்கு வெளியில் திறந்த வெளியைத்தான் இயற்கை உபாதைகளுக்கு பயன்படுத்துகின்றனர். எனவே அங்கு வசிக்கும் அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில், புதுவிளாங்குடி வார்டு–1ல் பெண்கள் மற்றும் ஆண்களுக்கான பொது கழிப்பிடம், குளியல் தொட்டி ஆகியவற்றை மாநகராட்சியால் கட்டித் தருவதற்கும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5. மதுரை மாநகராட்சி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் இருவரும் 06.09.2022 அன்று தூத்துக்குடி முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர் :

" மதுரை மாநகராட்சி மண்டலம்–02(வடக்கு) வார்டு 1ல் புது விளாங்குடி பகுதியில் பொதுக்கழிப்பிடம் கட்டுவது தொடர்பான மனு 30.07.2022ல் மாநகராட்சியால் பெறப்பட்டுள்ளது. மனுதாரர் கோரியுள்ள இடத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்குமான பொதுக்கழிப்பிடம் கட்டுவதற்கு மாநகராட்சியின் சுகாதாரக்குழுவின் ஒப்புதல் பெற்று மாநகராட்சியின் நிதி நிலைமைக்கேற்ப கழிப்பிடங்கள் கட்டப்படும் என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

6. உதவி ஆணையர், மண்டலம்–02 (வடக்கு) தன்னுடைய 02.09.2022 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

" மதுரை மாநகராட்சி – மண்டலம –2 (வடக்கு) வார்டு 1ல் புது விளாங்குடி பகுதியில் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு பொதுக்கழிப்பிடம் கட்டுவதற்கு திரு.மயில்சாமி என்பவரின் மனு வரப்பெற்றது. மதுரை மாநகராட்சி பழைய வார்டுகள் 72 ஆக இருந்தது. விரிவாக்கம் செய்யப்பட்ட

28 வார்டுகளுடன் இணைத்து, தற்போது மதுரை மாநகராட்சி 100 வார்டுகளாக நிர்வகிக்கப்பட்டு வருகிறது. விரிவாக்கப்பகுதியான புதுவிளாங்குடி பழைய மண்டலம் 1–ல் நிர்வகிக்கப்பட்டு, நிர்வாக ரீதியாக வார்டு வரையரை செய்யப்பட்டு தற்போது புதிதாக மண்டலம்–2 (வடக்கில்) இணைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகிறது. மேற்படி விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் மாநகராட்சியின் நிதி நிலமைக்கேற்ப மக்களின் அடிப்படை வசதிகள் கட்டமைக்கப்பட்டு வருகிறது. மனுதாரர் கோரிக்கையான பொதுக்கழிப்பிடம் கட்டுவதற்கு மாநகராட்சியின் சுகாதாரக்குழுவின் ஒப்புதல் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் மதுரை மாநகராட்சி செயற்பொறியாளர், உதவிப்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் மதுரை மாநகராட்சி மண்டலம் 02ன் உதவி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் தனது புகார் மனுவில் மதுரை மாநகராட்சி வார்டு–1, மண்டலம்–02(வடக்கு) புதுவிளாங்குடியில் சுமார் 10,000 மக்கள் வசித்து வருவதாகவும், அதில் ஓட்டு வீடுகளும், குடிசை வீடுகளிலும் வறுமைகோட்டின் கீழ் சுமார் 1,200 பேர் வசித்து வருகிறார்கள். அவர்கள் வீடுகளில் கழிப்பிட வசதிகள் இல்லாததால் சுமார் 1 கிலோமீட்டர் தூரம் நடந்து சென்று ஊருக்கு வெளியில் திறந்த வெளியில்தான் இயற்கை உபாதைகளுக்கு செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது என்பதையும் பெண்கள் இரவு நேரங்களில்தான் இயற்கை உபாதைகளுக்கு செல்லமுடியும் என்பதையும் அதனால் பெண்கள் மிகவும் மன உளைச்சலுக்கு ஆளாகி சிரமப்படுகிறார்கள். மேலும் இரவு நேரங்களில் இயற்கை உபாதைகளுக்காக வெளியில் செல்லும்போது விஷஜந்துக்கள் தீண்டும் சூழ்நிலை உள்ளது. மழைக்காலங்களில் மிகவும் பெரிய துன்பத்துக்குள்ளாகி வருகின்றனர் என்பதை மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்தும் அறிய முடிகிறது.

மதுரை மாநகராட்சி, புதுவிளாங்குடி பகுதி open defecation free(ODF) zone என்று அறிவிக்கப்பட்ட பகுதியாக இருப்பின், மேற்கண்ட பகுதியில் தனிநபர் கழிப்பிட வசதியோ(IHHL) அல்லது பொதுகழிப்பிடமோ இல்லாமல் இருப்பது வியப்பிற்குரியதாக உள்ளது. திறந்தவெளி கழிப்பிடம் குறித்து தமிழக அரசு மற்றும் மத்திய அரசின் மூலம் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்ட பின்பும், புதுவிளாங்குடியில் திறந்தவெளியில்தான் இயற்கை உபாதைகளுக்கு செல்ல வேண்டி உள்ளது என்பதை இம்முறைமன்ற நடுவத்தால் ஏற்றுக்கொள்ள இயலாத செயலாகவே கருதுகிறது. மேற்கண்ட இடங்களில் தனிநபர் கழிப்பிடம் கட்டவோ அல்லது பொதுகழிப்பிடம் கட்டவோ இதுவரை மண்டல அதிகாரிகளால் நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் தெள்ள தெளிவாக தெரிகிறது. இது மிகவும் கண்டிக்கத்தக்கது. இதில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள இம்முறைமன்றம் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுகிறது. புதுவிளாங்குடி பகுதியில் இதுவரை தனிநபர் கழிப்பிடம் கட்ட எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை அறிக்கையாக 15 நாட்களில் சமர்ப்பிக்க தெரிவிக்கப்படுகிறது. மேலும் புதுவிளாங்குடி பகுதியில், தனிநபர் கழிப்பிடம் கட்டுவதற்கு ஏதுவாக புதிதாக கணக்கெடுப்பு ஒன்றினை மேற்கொள்ளவும், அதற்குரிய தொகையை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தின் மூலம் அரசிடமிருந்து பெறவோ அல்லது Swachh Bharath Mission திட்டத்தின்கீழ் கோரி பெறவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள மதுரை மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் தனிநபர் கழிப்பிடம் கட்டுவதற்கு இயலாத

வீடுகளில் உள்ள பொதுமக்களுக்கு தீர்வாக அவர்கள் பயன்படுத்தும் வகையில் பொதுக்கழிப்பிடம் ஒன்றினை விரைவில் கட்டித்தருமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2022-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. R. மயில்சாமி,
மனை எண்.5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர், புதுவிளாங்குடி, மதுரை – 18.

2. ஆணையாளர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

3. உதவி ஆணையர்,
மண்டலம் - 02,
மதுரை மாநகராட்சி,
மதுரை மாவட்டம்.'

4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம்நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

5.. இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக